பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 10 வியாழக்கிழமை 27.10.2022 கதிர் 354

இனி இது ரகசியம் அல்ல!

சட்டத்தின் ஓட்டைக்குள் புகுந்து விளையாடுவதில் அரசியல்வாதிகள் பலே கில்லாடிகள். உதாரணத்திற்கு நேற்றைய சம்பவம் ஒன்று.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக லஞ்ச, ஊழல் தடுப்பு

2

## கோணேஸ்வர் ஆலயத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பு; சைவர்களுக்காக இஸ்லாமியரும் ஒன்றுபட்டுக் குரல்!

கல்முனை மாநகர சபை, கிண்ணியா நகர சபையில் ஏகமனதாகத் தீர்மானங்கள்

வரலாற்றுச் சிறப்பு மிக்க புராதனமான சைவக் கோயிலான திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதற்கு எதிராக இஸ்லாமியர்களும் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிண்ணியா நகர சபை இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக நேற்று முன்தினம் ஏகமனதாகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிய பின்னணியில் கல்முனை மாநகரசபையால் கோணேசர் கோயில் ஆக்கிரமிப்புக்கு எதிராக நேற்று ஏகமனதாகக் கண்டன தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கல்முனை மாநகரசபையின் மாதாந்தக்கூட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு மாநகரமுதல்வர் ஜனாப் ஏ.எம்.றகீவ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன் மற்றும் சந்திரசேகரம் ராஜன் ஆகிய இருவராலும் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் அத்துமீறல் தொடர்பாக உரையாற்றப்பட்டது.

உரையில் -

கிழக்கிலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற

2


# தேர்தல் சீர்திருத்தத்துக்கு இன்னொரு தெரிவுக் குழு

## சபாநாயகரிடம் நீதி அமைச்சர் கோரிக்கை

**கொழும்பு,ஒக்டோபர் 27**

**தேர்தல் முறைமையைத் திருத்துவதற்கு மற்றொரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.**

2





## மஹிந்த அணி இன்று புத்தளத்தில் பேரணி!

சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவினால் 'சாம்பலில் இருந்து எழுவோம்' எனும் தொனிப்பொருளில் இன்று ஒரு பேரணி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மறுசீரமைப்புக்கான இந்த பேரணியின் பொதுக் கூட்டம் புத்தளம் ஆராச்சிக்கட்டில்

2

## துவரங்காட்டு விபத்தில் இருவருக்குப் படுகாயம்



திருகோணமலை -அநுராதபுரம்பிரதான வீதியில் துவரங்காடு சந்தியில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் பலத்த

2

## மின்னல் தாக்கிய மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்



மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் பகுதியில் மின்னல் தாக்கிய நிலையில் காணாமல்போன

2

## யாழில் அமெ. துணைத் தூதர் பல தரப்புகளுடனும் சந்திப்பு





(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்.27

இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு அரசியல் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார்

2

## டக்ளஸ் மீது களுத்துறையில் தாக்குதல்; இருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியம்

களுத்துறைசிறைச்சாலையில்வைத்து, தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து, அவர்களுக்கு 15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 22 வருட கடூழிய சிறை தண்டனை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்றுத் தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள் இருவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி, பிரதிவாதிகள் இருவரும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தலா 1 இலட்சம் வீதம் நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

4

## மொட்டு எம்.பிக்கள் ஐ.தே.கட்சிப் பக்கம் பாய்வதற்குத் தயாராம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எம்.பிக்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் சுமார் 40 பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்கின்றனர் என சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகளுக்குப்

2

## 4,000 பொலிஸாருக்கு உடல் தகுதி இல்லை!

பொலிஸ் திணைக்களத்தில் சுமார் 4,000 அதிகாரிகள், நீண்டகாலமாகத் தரமான தேகாரோக்கிய நிலை இன்றி உள்ளனர் எனப் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன தெரிவித்தார்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் அறிவித்தார்.

பல உத்தியோகத்தர்கள் மருத்துவ

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆணைக்குழுவினால் கொடும்பு மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சட்டபூர்வமான வருமானத்துக்கு மேலதிகமாக லஞ்ச, ஊழல் முறைகளில் ஏழரைக் கோடி ரூபா சொத்துச் சேர்த்தார் என்பதுதான் குற்றச்சாட்டு. 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் அமைச்சராக இருந்த போது வருமானத்தை மீறி இவ்வளவு சொத்துச் சேர்த்தார் என்று தெரிவிக்கப் பட்டது. சட்டத்துக்கு முரணாக 26 நிதிப் பரிமாற்றங்களை மேற்கொண்டுள்ளார் என்பது உட்பட பல விடயங்கள் வழக்கில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு நேற்று மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது விமல் வீரவன்ஸவின் சட்டத்தரணியால் ஒரு பூர்வாங்க ஆட்சேபனை கிளப்பப் பட்டது.

இவ்வளவு பணத்தை விமல் வீரவன்ஸ சுவீகரிக்கவில்லை என்றோ அல்லது அந்த பணம் சட்டரீதியாக விமர்சனம் வீரவன்ஸவினால் உழைத்துப் பெறப் பட்டது என்றோ சட்டத்தரணி வாதிட வில்லை.

மாறாக, லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தனது கட்சிக்காரருக்கு (விமல் வீரவன்ஸவுக்கு) எதிராக வழக்குத் தொடுக்க முடியாது என்பதுதான் அவரது வாதம்.

லஞ்சத் தடுப்புச் சட்டம் அரசு ஊழியர்கள் லஞ்சமாகவோ, சட்டத்துக்கு முரணாகவோ பணம், சொத்துப் பெற்றால் அந்தத் தேட்டம் தொடர்பாக விசாரிப்பது. ஆனால் எனது கட்சிக்காரர் விமல் வீரவன்ஸ அரச ஊழியர் அல்லர், மக்கள் பிரதிநிதி அலுவலர். எனவே அவரை லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்க முடியாது என்றுதான் வாதிட்டு இருக்கின்றார் விமலின் சட்டத்தரணி.

நல்ல வாதம்தான் போங்கள்...!

இந்தப் பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பில் இரு தரப்பு வாதங்களையும் எழுத்தில் சமர்ப்பிக்கும்படி நீதிபதி கேட்டிருக்கின்றார்.

சட்டத்தில் ஓட்டை கிடைத்தால் ஊழல் பேர்வழிகள் புகுந்து விளையாடி விடுவார்கள். மறித்துப் பிடிக்க முடியாது.

***

எங்கள் வேலையைப் பற்றி நானே சில சமயங்களில் கூறுவது உண்டு.

ஈர் கிடைத்தால் போதும். ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி விடுவோம் என்பேன். செய்திகளுக்குக் கொஞ்சம் உப்புப் புளி சேர்த்து, காரமாக்கி, கை, கால் வைத்து, பொலிவாக்கி விடுவதில் நாம் அசகாய சூரர்கள்.

இலங்கையில் இவ்வருடம் ஐம்பது பல்கலைக்கழக மாணவர்கள் எச்.ஐ.வி. தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்ற செய்தியை நாமும் பிரசுரித்தோம். சந்தேகம் வந்தது. தேடிப் பார்த்தேன்.

குரல் தர வல்ல அதிகாரி கூறிய தகவல் அதுவல்ல.

இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட ஐம்பது பேருக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டிருக்கின்றது. அவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேரும், பாடசாலை மாணவர்கள் மூவரும் அடங்குவர் என்பதுதான் செய்தி.

அந்த ஐம்பது தொற்றையும் பல்கலைக்கழக மாணவர்கள் கணக்கில் சுமத்திவிட்டது நமது ஊடக தர்மம்.

"இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளான 2,350 பேர் அதற்கான சிகிச்சையைப் பெற்று வருகின்றனர். சமூகத்தில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 3,750 பேர் இருக்க கூடும் என உத்தேசிக்கப் படுகின்றது." - என்பதுதான் வழங்கப்பட்ட தகவல்.

முழுவதையும் பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்தின் மீது சுமத்தி, மாணவர் சமூகத்தை ஒரு கலக்குக் கலக்கி, வயிற்றில் புளியைக் கரைத்து விட்டோம் நாம்.

**- மின்னல் -**

## மொட்டு எம்.பிக்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.தே.கவில் இணைந்துகொள்வதற்குப் பலர் தயாராக இருக்கின்றனர் எனவும், ஆனால் எப்போது வருவார்கள் என கூற முடியாது எனவும் ரங்கே பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

## கோணேஸ்வர் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆலயமாக திருகோணமையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் என்ற போர்வையில் கோயில் புனருத்தாரண கட்டுமானப் பணிகள் திட்டமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன, அங்கு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் ஆக்கிரமிப்புக் கடைகளால் ஆலயத்தின் புனிதத்தன்மை தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றது. ஆலய வளாகம் மாசு படுத்தப்படுகிறது, கட்டுமானப் பணிகளுகளுக்கு தடை விதிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அரசாங்கம் சட்டத்திற்கு மாறாக அனைத்தையும் மூடி மறைத்து முன்னெடுக்கிறது. இதனை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்ற முன்மொழிவதாக கூறப்பட்டது.

மாநகர முதல்வர் உட்பட சபை உறுப்பினர்கள் அனைவரும் தாம் ஏகமனதாக இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர்.

மேற்படி தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கும் பிரதமர் கவனத்திற்கும் அனுப்ப வேண்டும் எனவும் சபையில் முடிவு எடுக்கப்பட்டது.

## தேர்தல் சீர்திருத்தத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 101 இன் விதிகளுக்கு அமைய இந்தக் குழுவில் 21 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என அமைச்சர் விஜயதாஸ, சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் குழுவிற்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை சபாநாயகர் பெயரிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே நாடாளுமன்றத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில், தற்போதைய பிரதமரும், அப்போதைய அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனாவின் தலைமையில் இதே விடயத்துக்காகத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப் பட்டதும், அது பல அமர்வுகளை நடத்திய பின்னர், பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்புக்கு மாறான பரிந்துரை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்ததும் குறிப்பிடத் தக்கவை.

## மஹிந்த அணி இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெறவுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று இந்த பேரணி நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னர் நாவலப்பிட்டிய நகரத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையில் மீண்டும் பொதுக்கூட்டம் நடத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## துவரங்காட்டு விபத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காயமடைந்துள்ளனர்.

சீமெந்து ஏற்றிவந்த பாரிய கொள்கலன் தாங்கி ஊர்தி ஒன்று வீதியில் நின்று கொண்டிருந்த மாடுகளுக்கு ஏற்படவுள்ள விபத்தை தவிர்க்க முயற்சி எடுத்த வேளை வீதியை விட்டு விலகி அங்கிருந்த அதி உயர் மின்னழுத்த மின்கம்பத்தில் மோதியதன் காரணமாக இவ்விபத்து சம்பவித்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தின் காரணமாக மின்கம்பம் மற்றும் மின் கம்பிகள் சேதமடைந்தமையால் திருகோணமலையின் பல பகுதிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மின்னல் தாக்கிய மீனவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்றொழிலாளரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

முகத்துவாரம் பகுதியில் திங்கள் மாலை மின்னல் தாக்கி மூன்று கடற்றொழிலாளர்கள் காயமடைந்த நிலையில் கடற்றொழிலாளர் ஒருவர் காணாமல் போயிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடியுடன் கூடிய கடும் மழைபெய்து வருகின்றது. இந்த நிலையில் முகத்துவாரம் ஆற்றுவாய் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர்களை மின்னல் தாக்கியுள்ளது.

இதன்போது காணாமல்போன கடற்றொழிலாளர் திராய்மடுவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 54 வயதுடைய உம்முனி விஜயகுமார் என கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காணாமல்போன கடற்றொழிலாளரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் திங்கள் மாலை சடலம் மீட்கப் பட்டுள்ளது.

மரண விசாரணையை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

## யாழில் அமெ. துணைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விருந்தினர் விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக அமெரிக்க துணை தூதர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரைத் தனியாகவும் –

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ், வாசுகி சுதாகர் ஆகியோரை தனியாகவும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது சமகால நிலைமைகள் தொடர்பில் அமெரிக்க துணைத் தூதர் அரசியல் பிரதிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் வலி வடக்கு மயிலிட்டி துறைமுகத்துக்கு சென்ற அவர், துறைமுக அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பொருளாதார நிலைமை தொடர்பிலும் கேட்டு அறிந்து கொண்டார்.

அத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் பிரச்சினை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்கிற முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றமை தொடர்பில், இதன்போது அவர் கடற்தொழிலாளர்களிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

அத்துடன் மயிலிட்டி கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு சென்ற அவர், அங்கு மீள் குடியேற்ற குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார்.

மேலும் காணிகள் விடுவிக்கப்படாமை தொடர்பிலும் பொதுமக்களின் காணிகள் அதி உயர் பாதுகாப்பு வலையத்தில் இருக்கின்றமை தொடர்பிலும் அவருக்கு வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் தெளிவுபடுத்தினார்.

## 4,000 பொலிஸாருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சான்றிதழ்களைச் சமர்ப்பித்தமையைத் தொடர்ந்து கடினமான பணிகளில் ஈடுபடுவதில்லை எனவும் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

சுகாதார மட்டத்தில் இல்லாத பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறித்த கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இது தொடர்பான முன்மொழிவை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அவர் அறிவித்துள்ளார்.




V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

VISA

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

**0768226244**

**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிமிர்த்தவே முடியாத நாய் வால்!

**இலங்கையில் இனப்படுகொலை மற்றும் பாரிய அட்டூழியங்களைத் தடுத்தல் தொடர்பான, நாடு கடந்த தமிழீழ அரசின் கனிஷ்ட அமைச்சர் விக்டர் இராஜலிங்கம் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பி இருக்கின்றார்.**

**அதற்கு இலங்கையில் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எம்.பி.காத்திரமான பதிலையும் விளக்கத்தையும் சுருக்கமாகத் தந்திருக்கின்றார். அவை நோக்கற்பாலவை.**

**விக்டர் இராஜலிங்கம் குறிப்பிடுபவை இவைதான்:-**

*** இந்திய வம்சாவளிப் பிரஜை ஒருவர் (ரிஷி சுனக்) இங்கிலாந்தின் பிரதமராகியிருக்கின்றார்.**

*** இந்திய வம்சாவளிப் பெண்மணி (கமலா ஹரிஸ்) அமெரிக்க உப ஜனாதிபதியாக முடிகின்றது.**

*** இந்தியத் தோன்றல் (எஸ்.ஆர்.நாதன்) சிங்கப்பூர் ஜனாதிபதியாக முடிந்தது.**

*** இந்திய வம்சாவளி அரசியல்வாதி (பிரவீந்த் ஜக்நாத்) மொரீசியஸின் பிரதமராக இயலுகின்றது.**

**ஆனால் ஸ்ரீலங்காவின் சுதேசியான தமிழர் ஒருவர் தன்னுடைய நாட்டின் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ முடிவதில்லை.**

**இலங்கைத் தமிழர் ஒருவர் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவராக இருந்து, நாட்டுக்குத் தலைமை தாங்கும் தகுதி உடையவராகவும் விளங்கினால், அவர் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ வரவிடாமல் தடுப்பதற்காக, இலங்கையர்கள் பட்டினிசாவை எதிர்கொள்ளவோ சாப்பாட்டிற்காக வரிசையில் நிற்கவோ கூடத் தயங்க மாட்டார்கள்.**

**இலங்கைக்கு இனியாவது புத்தி வருமா?**

**- இப்படிக் கேட்டிருக்கின்றார் விக்டர் இராஜலிங்கம். அதற்கு மனோ கணேசன் எம்.பி. தந்த பதில் அவதானிக்கப்பட வேண்டியது:-**

**"பிரதமர் ரிஷி சுனக்கின் நாட்டில் (UK) நிறவாதம் தோலில் (Skin Deep) இருக்கின்றது. ஆகவே அதைச் சுலபமாக மாற்றி எடுக்க முடிகின்றது. ஆனால் இங்கு இலங்கையில் இனவாதம் ஆன்மாவில் கலந்து புதைந்துள்ளதால் (Soul Deep) நம் நாட்டில் நமக்கு (சிறுபான்மையினருக்கு) முதலிடம் தரத் தயங்குகிறார்கள். எல்லாச் சிங்கள கட்சிகளுமே இப்படித்தான். மற்றபடி இங்கேயும் ரிஷி சுனக், பராக் ஒபாமா, அப்துல் கலாம் போன்றோர் இருக்கிறோம்" - என்று மனோ கணேசன் விளக்கம் தந்திருக்கின்றார்.**

**அது முற்றிலும் உண்மை. சிங்கள, பௌத்த பேரினவாதமும், மேலாதிக்கச் சிந்தனையும், மேலாண்மைத் திமிரும் இலங்கையின் மூளை மையத்தில் ஆழ ஊடுருவி பதிந்து கிடக்கின்றன. அந்த வெறி அவர்கள் இரத்தத்தில் ஊறி உள்ளது.**

**மதமும் மொழியும் அவர்களுக்கு வெறும் மார்க்கமும் தொடர்பாடல் ஊடகமும் அல்ல. அவற்றைத் தாண்டிய 'மதம்'. இனத்துவ குரூரம், கொடூரம்!**

**அது , திருந்த போவதே இல்லை. ஏனெனில் நாய் வாலை நிமிர்த்த முடியாதல்லவா?**

## திலினி பிரியமாலி தொடர்பிலான விசாரணைகளுக்கு மத்திய வங்கி சி.ஐ.டிக்கு தேவையான ஆலோசனை!



செல்வந்தர்களை மையப்படுத்தி கோடிக் கணக்கான பண மோசடியில் ஈடுபட்டதாக கூறி சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திகோ குறூப் ப்ரைவட் லிமிட்ட் நிறுவனத்தின் உரிமையாளர் எனக் கூறப்படும் திலினி பிரியமாலி தொடர்பிலான விசாரணைகளுக்கு மத்திய வங்கி, சி.ஐ.டிக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

மத்திய வங்கியின் இந்தப் விசாரணைகளை மேற்பார்வை செய்யும் உதவி பொலிஸ் அத்தியட்சர் திப்பட்டுவெளவின் கீழான பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல உள்ளிட்ட குழுவினர் மத்திய வங்கியின் சிறப்புக் குழுவிடம் இது தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது.

திகோ குறூப் ப்ரைவட் லிமிட்ட் நிறுவனம் தொடர்பில் மத்திய வங்கியிடம் பிரத்தியேக விசாரணைகளின் முன்னெடுத்துள்ள நிலையிலேயே, இந்த ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

அதன்படி, மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும் பணத்துக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என சி.ஐ.டி தகவல்கள் தெரிவித்தன.

இதில், சந்தேக நபரான திலினி பிரியமாலி, வேறு நபர்களின் பெயர்களில் ஏதேனும் வங்கிக் கணக்குகளை பேணினாரா என்பது தொடர்பாகவும் சி.ஐ.டி.யின் அவதானம் திரும்பியுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

## நுவரெலியாவில் திடீரென தீப்பிடித்து எரிந்த ஓட்டோ!



ஒரே குடும்பத்தினர் பயணித்த ஓட்டோ ஒன்று செவ்வாய்க்கிழமை தீப்பிடித்து எரிந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து ஓட்டோவுக்கு எரிபொருளை நிரப்பிக்கொண்டு நுவரெலியா லவர்ஸ்லிப் பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே, நுவரெலியா பஸ் நிலையத்துக்கு அருகில் இவ்வாறு ஓட்டோ தீப்பற்றி எரிந்துள்ளது.

ஓட்டோ தீப்பற்றி எரிந்த போது அருகில் இருந்தவர்கள் பல வழிகளில் தீயை கட்டுப்படுத்த முயற்சி செய்து, தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஓட்டோ இவ்வாறு தீப்பற்றி எரிந்த போது, ஓட்டோவுக்குள் தாய், தந்தை மற்றும் மகளும் பயணித்துக்கொண்டிருந்ததுடன், தந்தையே ஓட்டோவைச் செலுத்தினார் எனவும் தெரிய வந்துள்ளது.

அதில் பயணித்த மூவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், இந்த தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் இலங்கை விஜயம்



அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் றொபர்ட் கப்ரோத் செவ்வாய்க்கிழமை இலங்கை யை வந்தடைந்தார்.

றொபர்ட் கப்ரோத்தின் வருகை தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது ருவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான முன்னோக்கி வழிகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக அரசாங்கம் மற்றும் பொருளாதார நிபுணர்களை அவர் இந்த விஜயத்தின்போது சந்திக்கவுள்ளார்.

## கோதுமை மா இறக்குமதி குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

### பாணின் விலையை குறைக்க நடவடிக்கை

கோதுமை மாவை திறந்த கணக்குகளின் கீழ் இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பாண் உள்ளிட்ட பேக்கரி பொருள்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு அமைச்சின் பாதுகாப்பு செயலாளர் எஸ்.டி.கொடிகார தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரால் வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், ஒரு கிலோ மாவின் விலையை 250 ரூபா அல்லது அதற்கும் குறைவாக குறைத்தால், பாணின் விலையை குறைக்க முடியும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## டக்ளஸ் மீது களுத்துறையில் தாக்குதல்;

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1998 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி களுத்துறை சிறைச்சாலையில் வைத்து டக்ளஸ் எம்.பி மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், மேற்குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# கந்தசஷ்டி சிறப்பு



**வேதநெறி திருமுறைகள் வியந்துவிடும் முருகா**
**நாதனக்கே ஆசானாய் ஆகிநின்ற முருகா**
**வாதமிடு குணமகல வழிசமைப்பாய் முருகா**
**வையகத்தார் மனஞ்சிறக்க வைத்திடுவாய் முருகா**

**சோலைமலை எல்லாமே கோயில்கொண்டாய் முருகா**
**சுவையான தமிழ்கேட்ட துள்ளிவந்தாய் முருகா**
**வாலைவள்ளி காதல்கொண்டு லீலைசெய்தாய் முருகா**
**வடிவழகா வேலவனே வரமருள்வாய் முருகா**

**அருணகிரி தமிழ்பாட அருளிநின்றாய் முருகா**
**அமுதத்தமிழ் அனைவரையும் பருகச்செய்தாய் முருகா**
**திருமுறைகள் வரிசையிலே அமருகின்ற வகையில்**
**திருப்புகழை அருளச்செய்தாய் திருக்குமாரா சரணம்**

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்காக அரசால் தற்கொலை செய்ய முடியாதாம்!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

சுதந்திரத்தின் பின்னர் பொருளாதார வளர்ச்சி வேகம் மறை பெறுமானத்தில் வீழ்ச்சியடைந்துள்ளமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதற்காக அரசாங்கத்தால் தற்கொலை செய்து கொள்ள முடியாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் மறை 7 - 8 சதவீதம் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுதந்திரத்தின் பின்னர் பொருளாதாரம் இவ்வாறு மறை பெருமானத்தில் வீழ்ச்சியடைந்தமை கிடையாது.

இதன் காரணமாக நாட்டில் தற்போது ரூபாவும் இல்லை. டொலரும் இல்லை. சுமார் 60 ஆண்டுகளாக உருவாகியுள்ள இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தகுதி வாய்ந்த எவரும் எமது நாட்டில் அடையாளங் காணப்படவில்லை.

தற்போது லசார்ட் நிறுவனத்திடமே எமது எதிர்கால நற்பெயர் தங்கியுள்ளது. இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் எந்தவொரு வேலைத்திட்டத்துக்காகவும் எம்மால் கடன் பெற முடியாது. இது குறிப்பிட்டவொரு அரசியல்வாதியால் தோற்றம் பெற்ற பிரச்சினை அல்ல.

பெற்ற கடனை மீளச் செலுத்துவதற்காக கடன் பெறப்பட்டுள்ளது. அதற்கும் ஒரு வரையறை காணப்படுகிறது. எனினும் அந்த வரையறையையும் மீறி மேலும் மேலும் கடன் பெறப்பட்டுள்ளது.

தனிநபரொருவருக்கு வருமானத்தை விட செலவுகள் அதிகமாகக் காணப்பட்டால் , அவருக்கு கடன் பெற வேண்டிய நிலைமை ஏற்படும். அந்தக் கடனை மீளச் செலுத்துவதற்காக அவருக்கு மேலும் கடன் பெற வேண்டியேற்படும்.

இவ்வாறு பெற்ற கடன்களை மீள செலுத்த முடியாத நிலைமையில், 'என் மரணத்திற்கு நானே காரணம்' என்று கடிதம் எழுதி வைத்து விட்டு , தற்கொலை செய்து கொள்வார்.

ஆனால் அரசாங்கத்தால் அவ்வாறு செய்ய முடியாது. அரசாங்கத்தில் யார் தற்கொலை செய்து கொள்வர்?. - என்றார்.

# வாசிப்பு மாத விவாதப் போட்டியில் வென்றது கோணலிங்க மகா வித்தியாலயம்




திருகோணமலை உப்புவெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலே தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு உப்புவெளி பிரதேச சபை பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட விவாதச் சுற்று போட்டியில் தி/இலிங்கநகர் ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலய விவாத அணியினர் வெற்றிபெற்றுள்ளனர்.

இந்த விவாதச் சுற்றுப் போட்டியில் ஆறு பாடசாலைகள் பங்குபற்றியிருந்த நிலையில் இலிங்க நகர் ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலய அணியினர் முதலாம் இடத்தினையும், வெள்ளைமணல் அல் அக்ஸார் பாடசாலை அணியினர் இரண்டாம் இடத்தினையும், சாம்பல்தீவு சல்லியம்பாள் வித்தியாலய அணியினர் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# போதைப்பொருள் பாவனையின் பின்னணியில் ஆயுதப்படைகளே!





## சிறீதரன் எம்.பி. நேரடித் தாக்குதல்

வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையின் பின்னணியில் ஆயுதப்படைகளே உள்ளன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சு.டர்சனின் 'பயணம்' எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் முதல்வர் மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச தவிசாளர் சுரேன், அருட்தந்தை, அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சிறீதரன் எம்.பி. அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இப்போது நாம் பத்திரிகைகளை பார்க்கும் போது எமது மண்ணில் இடம்பெறும் சட்டவிரோத செயல்கள் தொடர்பிலும் குடும்ப வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் விபத்துக்கள் தொடர்பிலுமே அதிக செய்திகள் இருக்கின்றன. விபத்துகளாலும் தற்கொலைகளாலும் எமது இளம் தலைமுறையினர் மரணிக்கின்றனர். இவற்றுக்கான பிரதான காரணமாக இருப்பது எமது மண்ணில் தலைவிரித்தாடும் போதைப்பொருள் பாவனையே ஆகும்.

இலங்கையிலுள்ள படைகளில் ஏறத்தாழ 70 சதவீத மானவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றனர். போதை வஸ்தை கொண்டு வர அனுமதிப்பவர்களாகவும் அதனை கொண்டு வருபவர்கள் மற்றும் விற்பவர்களை ஊக்குவிப்பவர்களாகவும் அவர்களே காணப்படுகின்றனர்.

போதைப் பொருள் வியாபாரிகளை பொலிஸார் கைது செய்வதில்லை. பெருந்தொகையான கஞ்சா இங்கு கடத்தப்படுகின்றது என்றால் அதனை தடுக்கின்ற வல்லமை இலங்கையின் படைகளுக்கு இல்லையா? தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கவும் மட்டுமே இவர்களுக்குத் தெரியுமா?

தமிழ் இளைஞர்களை தமது இனம் பற்றியோ தேசம் பற்றியோ சிந்திக்க விடாது தடுக்கும் நோக்கில் திட்டமிட்டே போதைப்பொருள் பாவனையை இவர்கள் ஊக்குவிக்கிறார்கள். இவற்றுக்கு மத்தியிலும் 20 வயதே ஆன இளைஞன் டர்சன் தன் தேசம் பற்றியும் இனம் பற்றியும் பயணம் எனும் கவிதைத் தொகுப்பு நூலினை வெளிடுவது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது.

போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது எதிர்கால சந்ததியினரை மீட்க வேண்டிய பொறுப்பு வெறுமனே அரசியல்வாதிகளிடம் மட்டும் சுமத்த முடியாது. சமூகப் பொறுப்புணர்ந்து அனைத்து தரப்பினரும் இணைந்தே கட்டுப் படுத்த வேண்டும். பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றுடன் ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து இளம் சமூகத்தினரை அழிவில் இருந்து மீட்க வேண்டும். – என்றார்.

# பாவனைக்குதவாத பழப்புளி வைத்திருந்த உரிமையாளருக்கு 14 நாள் விளக்கமறியல்!

## யாழ் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 27

மனித பாவனைக்குதவாத நிலையில் பழப்புளியை வைத்திருந்த களஞ்சிய உரிமையாளரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கவும், கைப்பற்றப்பட்ட பழப்புளியை அழிக்கவும் யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டது.

ஜூம்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள களஞ்சியம் ஒன்றில் 6 ஆயிரம் கிலோ, பாவனைக்கு உதவாத பெருந் தொகையான பழப்புளியை பொதியிட்டுக் கொண்டிருந்த போது செவ்வாய்க்கிழமை மாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவினர் முற்றுகையிட்டனர்.

களஞ்சிய உரிமையாளருக்கு எதிராக நேற்று புதன் கிழமை யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நீதிமன்றில் யாழ் நகர பொதுச் சுகாதார பரிசோதகர் சஞ்ஜீவனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் களஞ்சிய உரிமையாளரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கவும், கைப்பற்றப்பட்ட பழப்புளியை அழிக்கவும் உத்தரவிட்ட யாழ்ப்பாண மேலதிக நீதிவான் நளினி சுபாஸ்கரன் நவம்பர் 9 ஆம் திகதி வரை குறித்த வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 162

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



விடுதலைப் புலிகள் இளைஞர்களைப் பலவந்தப்படுத்தித் தங்கள்இராணுவத்தில் கட்டாய பயிற்சிகள் தந்தமையும், பொதுமக்கள் தற்பாதுகாப்புக்கு எனப் புலிகளின் படைகளில் சேர்க்கப்படுவதும் சில விரிசல்களை ஏற்படுத்த, இவையும் மனித உரிமைகள் அமைப்புக்களால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பரப்புரைகளாகத் தரப்பட்டன.



மக்கள் இரு பகுதியினராலும் பாதிக்கப்பட்டு, பாரிய மனித உரிமை மீறல்களும் மனிதாபிமானமற்ற நடப்புகளும் ஏற்படலாம் என அங்கலாய்த்த நோர்வே அனுசரணையாளர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தை அணுகி, இப்படியான அழிவுகளைத் தடுக்கக்கூடிய ஏற்பாடுகளுக்கு நிர்ப்பந்தித்தனர்.

இதன் பெறுபேறாக ஐ.நா., செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அமெரிக்கா, நோர்வே ஆகியன கூட்டாக இணைந்து சில செயற்பாடுகளுக்குப் பொருந்திக் கொண்டன.

அதில் ஐ.நாவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் மனிதாபிமான பணிகளுக்கான உதவிகளை ஏற்படுத்துவது, அதற்காகத் தேவையான நிவாரொ பொருள்களை போர் வலயத்துக்கு அனுப்புவது, காயப்பட்டவர்களின் உடன் மருத்துவத் தேவைகளைக் கவனித்து, அவர்களை ஆஸ்பத்திரிகளுக்கு அப்புறப்படுத்துவது, ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின் ஊடாக உணவு தருவித்து வழங்குவது என்பன இவர்களால் பாரம் எடுக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா அரசு பொதுமக்களுக்குப் போதுமான பாதுகாப்பு அமைக்காமல் மேற்கொண்டு இராணுவத் தாக்குதல்களில் ஈடுபடாமல் இருக்க அமெரிக்காவும் நோர்வேயும், ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவது என்பது மற்றது.

சமாதான பேச்சுவார்த்தைகளில் அனுசரணை நாடுகளாக இணை தலைமை பதவிகளில் இருந்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வையுடன் இணைந்து விடுதலைப் புலிகள் சரணடைய ஏதுவான வழிகளைப் பற்றி அவர்களிடமும் ஸ்ரீலங்கா அரசுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவற்றுக்கான ஆதரவுகளுக்காக இந்தியா அணுகப்பட்டாலும் அதில் ஈடுபட எந்த நாட்டமும் இந்தியா காட்டவில்லை. விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்பதற்கு எதிரான எவ்வித நடவடிக்கையும் ஆதரிக்க இந்தியா உடன்படவில்லை. ஆக, எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொதுமக்களை அதிக அளவில் பாதிக்கக் கூடாது, அதில் கவனம் கொள்ள வேண்டும் என்ற அறிக்கைகளை அடிக்கடி வாய்ச் சம்பிராயத்திற்காக இந்தியா வெளிக் கொணர்ந்தது. அவ்வளவுதான்.

மேலும் இராணுவ நடவடிக்கைகளை தொடராமல் இருப்பதற்காக ஜி.எஸ்.ரி. வரிச் சலுகளை மீள வழங்காமல் விடுவது, சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொண்டிருந்த நிதியை உடனடியாக விடுவிக்க போவதில்லை என்றெல்லாம் தரப்பட்ட அழுத்தங்களைஒட்டி ஸ்ரீலங்கா துள்ளிக் குதித்தாலும் இவற்றின் மூலம் தங்களின் இறைமையில் தலையீடு செய்து விட முடியாது என்றும், பாதிப்பான விளைவுகளைக் கட்டுப்படுத்தி, தாங்கள் விடுதலைப் புலிகளை முற்றுமாக அளிப்பது என்ற தீர்மானத்திலிருந்து பின் வாங்கப் போவதில்லை எனவும் மஹிந்தவும் சூளுரைத்தார்.

அதன்படி, ஆனையிறவும், யாழ்ப்பாணமும் இராணுவத்தின் பிடியில் வந்ததும் விடுதலைப் புலிகளின் தென்பகுதியினதும் மேற்குப் பகுதியினதும் பாதுகாப்பு எல்லைக. கோடுகளுக்கு இடையே 'ஆயுதம் பாவிக்கப்படாத சூனிய பூமி' (no fire zone) என்ற வலயத்தை 21ஜனவரி 2009 உருவாக்கி, பொதுமக்களை பாதுகாப்புக்காக அங்கு செல்லும்படியும், மற்ற பிரதேசங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப் போவதாகவும் வானத்திலிருந்து வீசப்பட்ட துண்டு பிரசுரங்களாலும் அறிவிக்கப்பட்டது.

பின் விடுதலைப்புலிகள் அந்த வலயத்தில் இருந்து மக்களைக் கவசமாகப் பாவித்துத் தங்களைத் தாக்குகிறார்கள் எனக் கூறி ஸ்ரீலங்கா இராணுவம் இந்த வலயத்தையும் பெருவாரியான கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்கியதால், அங்கு பாதுகாப்புத் தேடி வந்த பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து நாள்களில் மாவட்ட ஆஸ்பத்திரியும் புதுகுடியிருப்பில் இருந்த பொன்னம்பலம் மருத்துவமனையும் தாக்கப்பட்டு, அங்கு காயமுற்று சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பொதுமக்களும் விடுதலைப் புலிகளின் போராளிகளும் உயிரிழந்தனர்.

உலக உணவுத் திட்டம் போதிய அளவு உணவை அரசாங்கத்திடம் வழங்கியும், அது முறையாக கையளிக்கப்படாது, விநியோகிக்கப்படாது, உணவு மற்றும் மருந்துகளின் பற்றாக்குறைகள் எழுந்த வேளை, அங்கு அகப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உணவு அனுப்பப்படுகிறது எனவும், கையளிப்பு ஏற்பாடுகள் சில சமயம் போரின் உக்கரத்தால் தடை படுகின்றன எனவும், உணவுப் பற்றாக்குறை என்பது விடுதலைப் புலிகளின் முகவர்களின் நாடகம் எனவும் இந்தியாவின் வெளி விவகார அமைச்சரால் கூட ஸ்ரீலங்காவுக்கு ஆதரவாக சர்வதேசத்திற்கு அறிவிக்கப்பட்டது.

பொது மக்களின் வெளியேற்றத்துக்காக என இராணுவம் 01 - 03 பெப்ரவரி 2009 வரை ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தைத் தன்னிச்சையாக அறிவித்தாலும், விடுதலை புலிகள் வெளியேற முயன்ற மக்களின் தொகையைக் கட்டுப்படுத்த எதிர்த்தாக்குதல்கள் நடத்த, இதனை அடுத்து அனுசரணை நாடுகளின் துணைத் தலைவர்கள் விடுதலைப் புலிகள், அரசு இரு பகுதியினரும் இணைந்து போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி, பேச்சு வார்த்தைகளை ஏற்படுத்துமாறு கேட்டாலும், அந்தக் கோரிக்கை விடுதலை புலிகளால் கணக்கெடுக்கப்படவில்லை. இராணுவத்தின் முன்னேற்றத்தால் புது குடியிருப்பில் இயங்கிய மருத்துவமனை மேலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலப்பரப்புக்கு மாற்றப்பட்டாலும், அது திரும்பவும் 09 பெப்ரவரி 2009 ஏவுகணைகளால் தாக்கப்படுகிறது.

இராணுவமும் முதலாவது ஆயுதமற்ற சூனிய பூமியை நீக்கி முல்லைத் தீவின் கிழக்கு பகுதியில் 12 பெப்ரவரி 2009 இல் இரண்டாவது வலயத்தை அமைத்துள்ளதாக அறிவித்தது. இத்தகைய அறிவிப்புக்கள் தொடர் கதையாகின.

(வளரும்...)







காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தியத் தேசியப் நெடுஞ்சாலை அமைப்பதில் முதலீடு செய்கிறது கனேடிய ஓய்வூதிய நிதியம்


முதலீட்டில் உருவாகும் நெடுஞ்சாலை

உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் மங்கலாக இருந்தாலும், உலக முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச ஏஜென்ஸிகள் இந்தியா மீது தொடர்ந்து நம்பிக்கையுடன் உள்ளனர்.

தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் (சிங்கப்பூர்) உடனான சமீபத்திய நேர்காணலில், ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் (OTPP) தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஜோ டெய்லர், இந்தியாவை ஒரு வாய்ப்புள்ள பூமியாகப் பார்க்கிறேன் என்று கூறினார்.தற்போதைய நிர்வாகம் வணிகத்திற்கு ஏற்றதாக - நட்புடையதாக - உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த சில தசாப்தங்களின் ஆற்றல் இறுதியாக இப்போது உணரப்படலாம் என்றார். இந்தியா ஒரு கவர்ச்சிகரமான முதலீட்டு இலக்கு என்றும், அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளில் அதன் வளர்ச்சி சந்தைகளில் ஒன்றாக இருக்கும் என்றும் டெய்லர் சுட்டிக்காட்டினார்.

இது ஒரு பெரிய, வளரும் மற்றும் ஆற்றல்மிக்க பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. அத்தோடு வெளிநாட்டு மூலதனத்திற்கான திறந்த தன்மையைக் கொண்டுள்ளது, இது எங்களுக்கு மூலோபாய ரீதியாக முக்கியமான சந்தையாக அமைகிறது, என்று அவர் கூறினார்.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டத்தின் (நிதியத்தின்) பிராந்தியத்தில் அதன் இருப்பை அதிகரிக்கும் திட்டங்களை அறிவித்ததைத் தொடர்ந்து சமீபத்திய வாரங்களில் ஆசியாவில் ஒரு பெரிய மாற்றத்தை அது ஏற்படுத்தி வருகிறது. அந்தப் பின்புலத்திலேயே டெய்லரின் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டம் இந்தியாவில் சுகாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவைகளில் உள்ள வாய்ப்புகளைக் கண்காணித்து வருகிறது. காப்பீட்டுத் துறை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பிரிவுகள், குறிப்பாக நிதிச் சேவைத் துறையில் ஆர்வமாக உள்ளது.

242.5 பில்லியன் கனேடியன் டொலர் (177.8 பில்லியன் அமெரிக்க டொலர் ) ஓய்வூதிய நிதியானது மும்பை அலுவலகத்தைத் திறந்து, இந்த ஆண்டு இறுதிக்குள் தோராயமாக 10 பேர் கொண்ட நிறுவனக் குழுவை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதால், நிச்சயமாக இது முதலீட்டுக்கான விடயமாகப் பேசப்படுகிறது. இது உள்ளூர் திறமைகள் மற்றும் அதன் மற்ற அலுவலகங்களிலிருந்து இடமாற்றங்கள் ஆகியவற்றின் கலவையை உள்ளடக்கும். வரவிருக்கும் ஆண்டுகளில் நிதியின் முதலீட்டு இலாகா வளரும்போது இந்த இருப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டத்தின் உள்ளூர் குழு அதன் தற்போதைய இந்திய முகத்தோற்றத்தைக் கட்டியெழுப்புகிறது. முதலீடுகளை ஆதாரமாகக் கொண்டு, நீண்ட கால கூட்டாண்மைகளை வளர்ப்பதிலும் மற்றும் வலுவான உள்ளூர் திறமைகளை ஈர்ப்பதிலிம் நிறுவனத்தின் செயற்பாடு ஆதரவளிக்கும். இந்த அலுவலகம் பாந்த்ரா குர்லா வளாகத்தின் நிதி மையத்தில் உள்ளது. அத்தோடு ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டத்தின் ஆறாவது உலகளாவிய அலுவலகமாகவும், ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் மூன்றாவது இடமாகவும் உள்ளது.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டம் என்பது கனடாவின் மிகப்பெரிய ஒற்றைத் தொழில் ஓய்வூதியத் திட்டமாகும். மேலும் 333,000 பணிபுரியும் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் சார்பாக ஓய்வூதியங்களை அது செலுத்துகிறது அத்தோடு திட்டச் சொத்துக்களைக் கையாண்டு முதலீடு செய்கிறது.

1990 இல் ஒரு சுயாதீன அமைப்பாக நிறுவப்பட்டதிலிருந்து, முதலீட்டு மேலாண்மை மற்றும் உறுப்பினர் சேவைகளில் புதுமை மற்றும் தலைமைத்துவத்திற்கான சர்வதேச நற்பெயரை அது கட்டியெழுப்பியுள்ளது. கனடாவின் டொராண்டோவை தலைமையிடமாகக் கொண்டு 1,100க்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் அது இயங்குகின்றது (உலகப் பொருளாதார மன்றத்தின் படி). லண்டன், சான் பிரான்சிஸ்கோ, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூரிலும் அதற்கு அலுவலகங்கள் உள்ளன.

பொது மற்றும் தனியார் பங்குகள், நிலையான வருமானம், கடன், பொருள்கள், இயற்கை வளங்கள், உள்கட்டமைப்பு, ரியல் எஸ்டேட் மற்றும் துணிகர வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு சொத்துக்களில் ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டம் முதலீடு செய்கிறது.



ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதிய திட்டத்தின் தலைவர் ஜோ டெய்லர்

இந்த மாத தொடக்கத்தில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நிதியுதவி செய்யப்படும் ஓர் உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளையான தேசிய நெடுஞ்சாலைகள் உள்கட்டமைப்பு அறக்கட்டளையில் மற்றொரு 60 மில்லியன் கனேடியன் டொலர் ( இந்தியப் பணத்தில் 3.6 பில்லியன் ரூபா அல்லது 44 மில்லியன் அமெரிக்க டொலர்) முதலீடு செய்வதாக அறிவித்தது. நவம்பர் 2021 இல் அதன் முந்தைய முதலீட்டுடன் சேர்ந்து, இது தேசிய நெடுஞ்சாலைகள் உள்கட்டமைப்பு அறக்கட்டளையில் அதன் மொத்த முதலீட்டை தோராயமாக 308 மில்லியன் கனேடியன் டொலர்களாக (இந்தியப் பணத்தில் 18.6 பில்லியன் ரூபாவாக ) கொண்டு வருகிறது.

மூலதன திரட்டலில் இருந்து கிடைக்கும் வருமானம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திலிருந்து மூன்று கூடுதல் சாலைச் சலுகைகளைப் பெறப் பயன்படுத்தப்படும், அதன் பிறகு குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள எட்டு சுங்கச் சாலைகளின் போர்ட்ஃபோலியோவை தேசிய நெடுஞ்சாலைகள் உள்கட்டமைப்பு அறக்கட்டவைத்திருக்கும், இயக்கும் மற்றும் பராமரிக்கும். மொத்தம் 636 கி.மீ. நீள சாலைகள் 20 முதல் 30 ஆண்டுகள் வரையிலான சலுகைக் காலம் வரை இருக்கும். இந்தியாவில் சாலை உள்கட்டமைப்பை மேலும் மேம்படுத்த இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சலுகைக் கட்டணத்தைப் பயன்படுத்தும்.

தேசிய நெடுஞ்சாலைகள் உள்கட்டமைப்பு அறக்கட்டளையில் எங்களது தொடர்ச்சியான முதலீடு உயர்தர சாலைகள் மற்றும் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிகிறது என்று ஒன்ராறியோ ஆசிரியர்கள் அமைப்பின் ஆசியா பசிபிக், உள்கட்டமைப்பு மற்றும் இயற்கை வளங்கள், மூத்த நிர்வாக இயக்குநர் புரூஸ் கிரேன் கூறினார்.

இந்திய அரசாங்கத்துடனான எங்கள் கூட்டாண்மையை மேலும் மேம்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் மற்றும் நாட்டில் எங்கள் முக்கிய உள்கட்டமைப்பு சொத்துக்களின் போர்ட்ஃபோலியோவை உருவாக்குகிறோம்." - என்றார் அவர்.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்டம் தனது சிங்கப்பூர் அலுவலகத்தில் தன் ஊழியர்களின் எண்ணிக்கையை 25ல் இருந்து 50 ஆக - இரட்டிப்பாக்க - இருப்பதாக செய்தி வெளியான அதே நேரத்தில் இந்தியாவில் முதலீடுகள் வந்துள்ளன. இது சிங்கப்பூரை ஆசியாவிலேயே அதன் மிகப்பெரிய அலுவலகமாக மாற்றும். இது 35 ஊழியர்கள் உள்ள ஹொங்கொங் அலுவலகத்தை விட பெரியது.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்டம் மற்ற கனேடிய ஓய்வூதிய நிதியங்களுடன் சேர்ந்து பணியாளர்களைச் சேர்த்து ஆசியாவிற்கு அதிக மூலதனத்தைப் பயன்படுத்துகிறது. ஒன்ராறியோ முனிசிபல் பணியாளர்கள் ஓய்வூதிய அமைப்பு தனது ஒன்டாரியோ முனிசிபல் எம்ப்ளாய்ஸ் ரிடையர்மென்ட் சிஸ்டம், அடுத்த எட்டு ஆண்டுகளில் இப்பகுதியில் உள்ள சொத்துக்களை இப்போது கனேடியன் டொலர் 13 பில்லியனில் (அமெரிக்க டொலர் 9.5 பில்லியன்) இருந்து மூன்று மடங்காக உயர்த்த திட்டமிட்டுள்ளதாக தலைவர் மற்றும் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி Blake Hutcheson கூறினார் என புளும்பேர்க் தெரிவித்துள்ளது. Caisse depot et placement du Quebec ஐந்தாண்டுகளில் கனேடியன் டொலர் 15 பில்லியன் அமெரிக்க டொலர்) 11 பில்லியன்) முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக பிசினஸ் டைம்ஸ் (சிங்கப்பூர்) தெரிவித்துள்ளது.

ஒன்டாரியோ ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் சிங்கப்பூர் விரிவாக்கமானது பிராந்தியத்தில் அதன் கனேடியன் டொலர் 20 பில்லியன் (அமெரிக்க டொலர் 14.7 பில்லியன்) வெளிப்பாட்டை உருவாக்குவதால், பரந்த அளவிலான சொத்துக்களில் முதலீடு செய்ய அனுமதிக்கும். நிறுவனத்தின் ரியல் எஸ்டேட் பிரிவு, காடிலாக் ஃபேர்வியூ மற்றும் உள்கட்டமைப்பு குழு ஆகிய இரண்டும் ஏற்கனவே நகர - மாநிலத்தில் ஊழியர்களைக் கொண்டுள்ளன.

தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் கையாள்வதில் சிங்கப்பூர் எங்களுக்கு மற்றொரு பரிமாணத்தை அளிக்கிறது என்று டெய்லர் கூறினார். இது மிகவும் பயனுள்ள இணை முதலீட்டாளர்கள் மற்றும் நிதி ஆலோசகர்களைக் கொண்ட ஒரு துடிப்பான நிதி மையமாகும். என்றார் அவர்.

நிதியானது அதன் ஆசிய சொத்துக்களுக்கு கடினமான இலக்கைக் கொண்டிருக்கவில்லை, இருப்பினும் வட அமெரிக்காவிற்கு வெளியே புதிய முதலீடுகளில் பாதியை வரிசைப்படுத்துவது போல் இயற்கையாகவே வளரும். பாரம்பரியமாக, இந்த நிதி கனடா மற்றும் அமெரிக்காவில் 70 சதவீத சொத்துக்களை வைத்திருக்கிறது - டெய்லர் கூறினார்.

சிங்கப்பூர் அதன் சிறந்த இணைப்புடன் எங்களுக்கு ஒரு யோசனை மையமாக உள்ளது. இது முதலீட்டு வல்லுநர்களின் வலுவான தொகுப்பையும் கொண்டுள்ளது என்று டெய்லர் 'தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸுக்கு' அளித்த பேட்டியில் கூறினார். ஆசியா கவர்ச்சியானது. இது அதிகரித்து வரும் மக்கள்தொகை, மூலதனத்திற்கான ஏற்றுக்கொள்ளும் சூழல், வணிகத்தின் அளவிடுதல் போன்ற நேர்மறையான இயக்கவியலைக் கொண்டுள்ளது மற்றும் வட அமெரிக்க சந்தைகளுக்கு எதிர் சுழற்சியாக இருக்கலாம்" - என்றார் அவர்.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**


மின் உற்பத்தியிலும் முதலீடு

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையின் வரவு - செலவுத் திட்டத் தயாரிப்பு பிரதான குறைபாட்டுக்கான காரணம் அம்பலம்!

## வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு வெளியிட்டது

கொழும்பு, ஒக். 27

வெற்றியை நோக்கிய பேராவலுடன் உருவாக்கப்படும் வரவு, செலவுத்திட்டம் அந்த வெற்றியை அடைவதை முன்னிறுத்திய எந்தவொரு தெளிவான திட்டத்தையும் கொண்டிராதமை வரவு, செலவுத் திட்டத் தயாரிப்பு செயன்முறையின் பிரதான குறைபாடாகும் என்று வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டம் தொடர்பில் 'கடந்தகால இடர்ப்பாடுகளைத் தவிர்த்தல்' என்ற தலைப்பில் நிகழ்நிலை முறைமையிலான கலந்துரையாடலொன்று கடந்த வாரம் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தக் கலந்துரையாடலில் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிஷான் டி மெல் மற்றும் அந்த அமைப்பின் சிரேஷ்ட ஆய்வாளர்களான ராஜ் ராஜகுலேந்திரன், சுமினி சியம்பலாப்பிட்டிய ஆகியோர் தமது ஆய்வு விளக்கங்களை முன்வைத்ததுடன் அது தொடர்பாக நிபுணத்துவக் கலந்துரையாடலில் உலக வங்கியின் அபிவிருத்திப் பொருளாதாரத்துறைக்கான முன்னாள் சிரேஷ்ட பணிப்பாளர் ஷாந்தயனன் தேவராஜன், பேராதனை பல்கலைக்கழகத்தின் தலைமைப் பேராசிரியர் டிலெனி குணவர்தன, கே.பி.எம்.ஜி நிறுவனத்தின் வரி மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவின் தலைமை அதிகாரி சுரேஷ் பெரேரா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

வெற்றியை நோக்கிய பேராவலுடன் உருவாக்கப்படும் வரவு, செலவுத்திட்டம் அந்த வெற்றியை அடைவதை முன்னிறுத்திய எந்தவொரு தெளிவான திட்டத்தையும் கொண்டிராதமை இலங்கையின் வரவு, செலவுத்திட்டத் தயாரிப்பு செயன்முறையின் பிரதான குறைபாடாகும் என்று இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

உதாரணத்துக்கு இந்த வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டப் பற்றாக்குறை 0.7 சதவீதமாக இலக்கிடப்பட்டிருப்பதுடன் அதனை அடைவதற்கான குறைந்தபட்ச வருமான அதிகரிப்பு 68 சதவீதமாக அமையவேண்டும்.

இருப்பினும் நாட்டின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் அத்தகைய அதிகரிப்பு ஒரேயொருமுறை 1978 ஆம் ஆண்டில் மாத்திரமே அடையப்பட்டிருக்கின்றது என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிறைவேற்றப்படமுடியாத – நடைமுறைச்சாத்தியமற்ற – வரவு, செலவுத்திட்ட வாக்குறுதிகள் நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைவதற்கு வழிவகுக்கும் என்று என்று இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த உலக வங்கியின் அபிவிருத்திப் பொருளாதாரத் துறைக்கான முன்னாள் சிரேஷ்ட பணிப்பாளர் பேராசிரியர் ஷாந்தயனன் தேவராஜன் சுட்டிக்காட்டினார்.

மேலும் நிதியியல் நியமங்களுக்கு அமைவாகச் செயற்படுவதில் இலங்கை அடைந்திருக்கும் தோல்வி, அரசமைப்பிற்கு முரணான சில வரி அறவீட்டுக் கொள்கைகள் மற்றும் தேசிய வரவு, செலவுத் திட்டம் தொடர்பில் போதிய வெளிப்படைத்தன்மையின்மை ஆகிய 3 விடயங்களும் நாடு முகங்கொடுத்திருக்கும் இடர்ப்பாடுகளுக்கு முக்கிய காரணம் என்று தமது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருப்பதாக வெரிட்டே ரிசேர்ச் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 48 சதவீதமான செலவின முன்மொழிவுகள் தொடர்பான விவரங்கள் இன்னமும் வெளிப்படுத்தப்படாமல் இருக்கின்றமையுடன், அவை 'வெளிப்படைத்தன்மை' தொடர்பில் குறித்தளவிலான இடைவெளியைத் தோற்றுவித்திருப்பதாகவும் அதுபற்றி எதிர்காலத்தில் அவதானம் செலுத்தவேண்டியது அவசியம் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாடு தொடர்பான தகவல்கள் இன்னமும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படாத நிலையில், வெளிப்படைத்தன்மை தொடர்பான கலந்துரையாடலில் இந்த விடயம் பற்றியும் பேசப்பட்டது.

அடுத்ததாக வரி அறவீட்டுக்கொள்கையில் கடந்த 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய பாரிய மாற்றங்கள் தற்போதைய நெருக்கடிகளுக்கான முக்கிய காரணமாக அடையாளங்காணப்பட்டதுடன், கடந்த 2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சில வரிகளை அறவிடுவதற்குத் தவறியதன் விளைவாக வருமானத்தில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி உள்ளடங்கலாக கொள்கை ரீதியில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டைக் குடியுரிமையை ரத்துசெய்து ஜனநாயக முறைப்படி முடிந்தால் அரசியலுக்குள் வாருங்கள்!

## பஸிலுக்கு சவால் விடுக்கிறார் சஜித்



பஷில் ராஜபக்ஷ தனது இரட்டைக் குடியுரிமையை நீக்கிக் கொண்டு மீண்டும் நாடு திரும்பவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இரட்டை குடியுரிமையை நீக்கி , ஜனநாயக முறைமைக்குள் நேருக்கு நேர் அமைதியான அரசியல் போட்டிக்கு வருமாறு பஸில் ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட மக்கள் மாத்திரமல்லர், அனைத்து மாவட்ட மக்களும் அவருக்கு சிறந்த பாடத்தை புகட்டுவதற்குக் காத்திருக்கின்றனர் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார். கம்பஹாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாம் ஒருபோதும் 69 லட்சம் மக்களையும், 56 லட்சம் மக்களையும், ஏனையவர்களையும் வேறுபடுத்திப்பார்க்கவில் லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் வெற்றி பெறும் போது , 2 கோடியே 20 லட்சம் மக்களும் வெற்றி பெறுவர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏன் பிரதமர் பதவியை ஏற்கவில்லை என்று பெரும்பாலானோர் என்னிடம் கேள்வியெழுப்பிக் கொண்டிருந்தனர்.

நான் அவ்வாறு செய்திருந்தால் இன்று ராஜபக்ஷ துதிபாடிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை எனக்கும் ஏற்பட்டிருக்கும்.

எமக்கு கொள்கையொன்று உள்ளது. நாம் சிறந்தவற்றை ஆதரிக்கும் அதேவேளை, பாதகமான விடயங்களுக்கு நேரடியாக எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம்.

தற்போது அரசமைப்பின் 22 ஆவது திருத் தத்தை வெற்றி கொண்டுள்ளதாகவும், அரசாங்கத்துக்கு 170 ஆசனங்கள் காணப்படுகின்றன எனவும் பெருமிதம் பேசிக் கொண்டிருக்கின்றனர். எமது அணியினர் வாக்களித்திருக்காவிட்டால் 22 ஐ நிறைவேற்றியிருக்க முடியாது என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இரட்டை குடியுரிமையை நீக்கிக் கொண்டு பஸில் ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பவுள்ளார் என தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இரட்டை குடியுரிமையை நீக்கி , ஜனநாயக முறைமைக்குள் நேருக்கு நேர் அமைதியான அரசியல் போட்டிக்கு வருமாறு பஸில் ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கின்றேன். முடிந்தால் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுமாறு அவருக்கு சவால் விடுக்கின்றேன்.

கொழும்பு மாவட்ட மக்கள் மாத்திரமல்லர். 25 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் பஸிலில் ராஜபக்ஷவிற்கு சிறந்த பாடத்தைப் புகட்டவே காத்திருக்கின்றனர். 7 மூளைக்காரரான பஸில் ராஜபக்ஷவே நாட்டை சீரழித்தார். அவரே நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றார். – என்றார்.

# கோதுமை மாவில் புழுக்கள்: பரிசோதனைக்கு உத்தரவு!

## அசேல சம்பத் தெரிவிப்பு



நாட்டில் தற்போது இறக்குமதி செய் யப்படும் கோதுமைமா மனித பாவனைக்கு உகந்ததல்ல. அவற்றில் சிறிய வண்டுகள் மற்றும் புழுக்கள் காணப்படுகின்றன.

எனவே கோதுமை மா களஞ்சியசாலைகளில் துரித பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் தரத்தைப் பரிசோதிக்கும் அதிகாரத்தை தரநிர்ணயசபைக்கு வழங்குமாறும் அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் வலியுறுத்தியுள்ளார்.

தரமற்ற கோதுமை மா இறக் குமதி செய்யப்பட்டு , மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (வியாழக்கிழமை) ப்ரிமா நிறுவனம் மற்றும் தர நிர்ணயசபை வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அசேல சம்பத் தெரிவித் தார்.

செவ்வாய்கிழமை தர நிர்ணய சபை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் தரத்தை பரிசோதிக்கும் அதிகாரம் இலங்கை தரநிர்ணய சபைக்கு வழங்கப்பட வேண் டும். தர நிர்ணய சபைக்கு சுமார் 100 பொருள்களின் தரத்தைப் பரிசோதிப்பதற்கான அதிகாரம் மாத்திரமே காணப்படுகிறது.

ஆனால் நுகர்வோர் அலுவல் கள் அதிகாரசபையால் சுமார் ஆயிரக்கணக்கான பொருள்களின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.ஆனால் தர நிர்ணயசபைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் மா தொடர்பான பரிசோதனைகளை மேற் கொள்வதற்கான அதிகாரம் கிடையாது.

இது சிக்கல் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்குக் கூடத் தெரியாது. இறக்குமதி தொடர்பான நிர் வாக அதிகாரியைச் சந்தித்து , இது தொடர்பில் தெளிவுபடுத்தவுள்ளோம்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா விலங்குகளுக்கு வழங்குவதற்கு பொருத்தமானதாகவே காணப்படுகிறது. அது மனித பாவனைக்கு உகந்ததல்ல.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவில் சிறுவண்டுகளும், புழுக்களும் இனங்காணப்பட்டுள்ளன. எனவே கோதுமை மா களஞ்சியசாலைகளைப் பரிசோதிக்குமாறு ஜனாதிபதி, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை உள்ளிட்ட அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

நாட்டில் கோதுமை மாவை இறக்குமதி செய்யும் பிரதான நிறுவனமான பிறீமா நிறுவனவளாகத்திலும், தர நிர்ணயசபை வளாகத்திலும் இன்று (வியாழக்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

எமது ஆர்ப்பாட்டத்தை எதிர்கொள்ள தயாராகுமாறு அவர்களுக்கு முன்னறிவித்தல் விடுக்கின்றோம். தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள மாவை அடுத்த தேர்தல்களில் துண்டு பிரசுரங்களை ஒட்டுவதற்காக சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிராமியக் கடற்றொழிலாளர்கள் சங்கங்களை வலுப்படுத்த யாப்பு சீர்திருத்தம் மறுசீரமைப்பு!



## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் கலந்துரையாடல்



தேசிய மீனவர் மகா சமேளனத்தின் யாப்பை மறுசீரமைப்பது தொடர்பான கலந்துரையாடல், குறித்த சம்மேளனத்தின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக குசமேளனத்தின் யாப்பு சீர்திருத்தம் செய்யப்படாத நிலையில், கால சூழல் மாற்றங்களுக்கு அமைய கடற்றொழில் சார் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையில் யாப்பு சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோ சனைக்கு அமைய, மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, கிராமிய கடற்றொழில் சங்கங்கள் பெயரளவிலான சங்கங்களாக இன்றி, வினைத் திறனான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், காலத்துக்கு காலம் யாப்பு மாத்திரமன்றி, சங்கங்களின் கட்டமைப்புக்களும் புதியவர்கள் உள்வாங்கப்பட்டு மெருகேற்றப்பட வேண்டும் என்ற கருத்து அமைச்சர்களால் வெளியிடப்பட்டது.

அத்துடன், மாவட்ட ரீதியான கிராமிய கடற்றொழில் சங்கங்களிடம், யாப்பு சீர்திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குமாறு தெரிவித்த அமைச்சர்கள், எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி, அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளையும் உள்வாங்கி, யாப்பு சீர்திருத்தம் பூரணப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தனர். இந்தக் கலந்துரையாடலில், கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த, அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மற்றும் கடற்றொழில் திணைக்களம் உட்பட்ட கடற்றொழில் சார் திணைக்களங்களின் பிரதானிகள், கிராமிய கடற்றொழிலாளர் சங்கங்களின் மாவட்ட ரீதியான பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு, இதன்போது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# தேர்தல், மனித உரிமைகள் ஆணைக்குழுக்களின் தலைவர்களைப் பதவி நீக்க அரசாங்கம் முயற்சி!

## வாசுதேவ சாடல்



அரசாங்கத்தின் நிலைப்பாட்டை கருத்திற் கொள்ளாமல் , விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நியாயமான நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ள தேர்தல்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுக்களின் தலைவர்களை பதவி நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசாங்கம் இவ்வாறு ஏதேனுமொரு நடவடிக்கையை எடுக்குமானால் , அது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை நீக்குவதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே கருதப்படும் என்றும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரோஹினி மாரசிங்க ஆகியோரை பதவிகளிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்கள் இருவரும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைக் கருத்திற் கொள்ளாமல், நியாயத்தின் பக்கம் உறுதியாகவுள்ளனர்.

தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்றும், அதனைக் காலம் தாழ்த்த இடமளிக்க முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது ஆணைக்குழுவின் கடமையாகும்.

அதற்கான நடவடிக்கைகளை ஆணைக்குழு தற்போது முன்னெடுத்து வருகிறது. இதனைத் தடுப்பதற்காக தற்போதைய தேர்தல் ஆணையாளரை பதவி நீக்கி, தமக்கேற்றாற் போல் செயற்படும் ஒருவரை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

பக்கச் சார்பற்ற இவ்விரு தலைவர்களும் நியாயத்தை நிலைநாட்டியுள்ளனர். எனவே இவர்களை பதவி நீக்குவதற்கு அரசாங்கம் ஏதேனுமொரு நடவடிக்கையை எடுக்குமானால் , அது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை நீக்குவதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே கருதப்படும். அரசாங்கம் அதன் தேவைக்கு ஏற்றாற் போல் தீர்மானங்களை எடுப்பதற்கு இனியொரு போதும் மக்கள் இடமளிக்கப் போவதில்லை.

என்றுமில்லாதவாறான புதிய கூட்டணியொன்றை நாம் அமைத்திருக்கின்றோம். இந்தக் கூட்டணியின் ஊடாக அரசாங்கததுடன் எந்தவொரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கும் தீர்மானத்தை தம்மிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறுகின்றனர்.

அரசு மக்களுக்கு சார்பான தீர்மானங்களை எடுக்காவிட்டாலும் , மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் தீர்மானங்களை எடுக்க வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம். நாட்டில் பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கும் தீர்மானங்களை எடுக்க முடியாவிட்டால் , அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும். – என்றார்.

# ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள 10 விடயங்களையும் சுகாதார அமைச்சு பின்பற்றாததாலேயே மருந்து தட்டுப்பாடு!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

நாட்டில் வைத்தியசாலைகளில் நிலவும் பாரிய மருந்துத் தட்டுபாட்டுக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட10விடயங்கள்அடங்கிய பரிந்துரைகளை சுகாதார அமைச்சு சரியான முறையில் பின்பற்றாமையே நாட்டில் பாரிய மருந்து தட்டுப்பாடு நிலவக் காரணம் என அரச வைத்திய அதிகாரி கள் சங்கத்தினர் சுகாதார அமைச்சின் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

தேசிய வைத்தியசாலைகளில் அஸ்ப்ரீன் மருந்துகளுக்குக்கூட பாரிய தட்டுப்பாடு நிலவுவதுடன், பிரதேச வைத்தியசாலைகளில் சேலைன் போத்தல்களிலிருந்து பரசிட்டமோல் மருந்துகளுக்குக் கூட தட்டுப்பாட்டு நிலவுவதாக அந்த சங்கம் மேலும் குறிப்பிடுகின்றது.

ஔடதங்கள் மற்றும் மருந்து வகைகள் தொடர்பில் ஈடுபட்டுள்ள சகல நிறு வனங்களையும் ஒன்றிணைத்து குழுவொன்றை நியமித்து, அதனூடாகக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து தேவையான தீர்மானங்களை எடுக்குமாறு தமது சங்கம் விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டு சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியிருந்தபோதிலும், அதனை சுகாதார அமைச்சு இதுவரை நடைமுறைப் படுத்தவில்லை.

இதன் காரணமாகவே நாட்டில் மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவக்காரணம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.

# அனர்த்தம் பாதித்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு!

சீரற்ற காலநிலை காரணமாக ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால், அதனை முதலில் புகைப்படம் எடுத்து தமது பிரதேசத்தில் உள்ள கிராம அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் –

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உணவு மற்றும் பானங்களை வழங்கி வருகின்றது.

400 இற்கும் மேற்பட்ட வீடுகள் சிறிய மற்றும் நடுத்தர பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு அடிப்படைத் தொகையாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அதன் பின்னர் மதிப்பீடு செய்து பணம் வழங்கப்படும்.

ஓர் எச்சரிக்கையாக, உங்கள் வீட்டுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், உடனடியாக பேரழிவின் படங்களை எடுக்கவும். அதை கிராம அலுவலரிடம் காண்பித்து, எழுத்துபூர்வமாக கோரிக்கை விடுக்க வேண்டும்.

பிரதேச செயலாளரிடம் கோரிக்கையை சமர்ப்பித்த பின்னர் நிவாரண சேவை நிலையங்கள் பணத்தை வழங்க ஏற்பாடு செய்யும். அத்தகைய வாய்ப்பை யாராவது தவறவிட்டிருந்தால், உடனடியாக கிராமசேவை அலுவலருக்கு அறிவித்து. பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

ஆரம்பகட்டணமாக 10 ஆயிரம் மற்றும் முழு மதிப்பீட்டிற்குப் பின்னர் மீதமுள்ள கொடுப்பனவு வழங்கப்படும்.

பலத்த சேதம் அடைந்தவர்கள்கூட, முதலில் சேதத்தை புகைப்படம் எடுத்து கிராம அலுவலரிடம் தெரிவித்து சான்றிதழ் பெற வேண்டும்’ என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிணற்றில்மூழ்கி பலியான இரு இளைஞர்களும் போதைப் பொருள் பாவித்திருந்தமை உறுதி!

தோட்டக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இளைஞர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று உடற்கூற்று பரிசோதனையின் பின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இருவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகளை பரிசோதனைக்கு உள்படுத்திய போதும் மதுசாரம் மற்றும் போதைப் பொருளை பாவித்தமை கண்டறியப் பட்டுள்ளது.

பருத்தித்துறை புலோலி சிங்கநகர் பகுதியில் திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பருத்தித்துறை பன்னங்கட்டு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டனர்.

இந்துக்களின் பண்டிகையான தீபாவளி பெருநாளான திங்கட்கிழமை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி சட்ட மருத்துவ வல்லுநர் க.வாசுதேவா முன்னிலையில் இருவரது சடலமும் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2022இல் வெளியிடப்பெற்றது.